"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.78,14,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.9,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கைமீதான வாக்கெடுப்பு காலையிலேயே முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அது காலையிலேயே முடிந்துவிட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–7–2009) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. சிறைத் துறைக்குத் தேவையான பிற மளிகைப் பொருட்கள் (நிதித் (சம்பளங்கள்) துறையின் 11–11–2008 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 483–ல் அறிவிக்கையிடப்பட்டுள்ள பொருட்கள் நீங்கலாக) மற்றும் காய்கறிகளைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 24–3–2009 ஆம் நாளிட்ட 115 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2009 ஜூலை 7]

59. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.எப். 2) துறையின் 25–2–2009 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 32–ல் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறை மற்றும் நிபந்தனைகளின்படி வண்டலூர் முதல் நெமிலிச்சேரி வரையிலான வெளிவட்டச் சாலையினை அமைக்கும் பணிகளைச் செயல்படுத்த, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினை நிருவகிக்கும் அமைப்பாக நியமித்து அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 24–3–2009 ஆம் நாளிட்ட 116 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அளவிற்கு உள்ளூரில் விளையும் துவரம் பருப்பை உற்பத்தி மையங்களிலேயே 30–6–2009 வரை நேரடியாகக் கொள்முதல் செய்யப்படலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 13–4–2009 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. தமிழ்நாடு மின்சார வாரியம் அல்லது தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆகிய இரு அமைப்புகளில் எதன் மூலமாக சாதகமான விலையில் நிலக்கரி கிடைக்குமோ அந்த அமைப்பிடமிருந்து நிலக்கரியினை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் கொள்முதல் செய்துகொள்ளலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 4–5–2009 ஆம் நாளிட்ட 179 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்குச் சீருடைகளை வழங்கத் தேவைப்படும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள இனங்கள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தமிழ்நாடு துணிநூல் கழகத்திலிருந்து கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரால் நேரடியாகக் கொள்முதல் செய்யலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்)

துறையின் 5–5–2009 ஆம் நாளிட்ட 181 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

84. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2008–2009)

85. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2008–2009)

86. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2008–2009)

87. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தேழாவது அறிக்கை. (2008–2009)

88. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தெட்டாவது அறிக்கை. (2008–2009)

89. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தொன்பதாவது அறிக்கை. (2008–2009)

90. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபதாவது அறிக்கை. (2008–2009)

91. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தொன்றாவது அறிக்கை. (2008–2009)

92. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

93. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)